**செய்தி வெளியீடு எண்.202** **நாள்.14.04.2017**

**திருவள்ளூர் மாவட்டத்தில் காந்தி அமைதிப் பரிசு விருதுக்காக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

~~~~~

நமது தேசப்பிதா அண்ணல் மகாத்மா காந்தியடிகளின் 125-வது பிறந்த நாளினை விமரிசையாகக் கொண்டாடும் பொருட்டு, மைய அரசால் 1995-ல் காந்தி அமைதிப் பரிசு விருதுகள் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

நமது தேசத்திற்கு நற்பெயரையும், புகழையும் ஏற்படுத்தி, அமைதிவழியில் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்கள் ஏற்படுத்திய தலைசிறந்த தனிநபர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு மைய அரசின் சுற்றுலா கலாச்சாரத் துறை மூலம் காந்தி அமைதிப் பரிசு விருதுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் இவ்வாண்டிற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இந்திய அரசின் மாண்புமிகு பிரதமர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட நடுவர் குழுவின் மூலம் அமைதிவழியில் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்கள் ஏற்படுத்திய தலைசிறந்த தனிநபர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு மைய அரசின் சுற்றுலா மற்றும் கலாச்சாரத் துறை மூலம் காந்தி அமைதிப் பரிசு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சான்றுடன் கூடிய ரூ. ஒரு கோடி தொகையுடன் இந்த மதிப்புமிக்க விருது வழங்கப்பட உள்ளது.

இவ்விருதினைப் பெறுவதற்கு சமுதாயத்தில் பொருளாதார, சமூகரீதியாக பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அருமையாகத் தொண்டாற்றிய கருத்துக்களை உள்ளடக்கிய வகையில் கடந்த 10 ஆண்டுகளுக்குள் புத்தகம் வெளியிட்டிருக்க வேண்டும்.

இவ்விருதுக்காக விண்ணப்பிக்க எவ்வித வயது வரம்பும், ஆண், பெண் என்ற எவ்வித பேதமும், சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் ஆகிய எவ்வித பேதமும் இல்லை.

மேற்காணும் விருதுகளுக்கான விண்ணப்பங்கள் மற்றும் இதர விவரங்களை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய இணைய தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். இணையதளத்தின் முகவரி www.sdat.tn.gov.in ஆகும். மேலும் மைய அரசின் கலாச்சாரத்துறையின் இணைய தளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இணையதளத்தின் முகவரி www.indiaculture.nic.in ஆகும்.

தகுதியான விண்ணப்பங்களை மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், ஒருங்கிணைந்த மாவட்ட விளையாட்டரங்கம் அவர்களது அலுவலகத்தில் 15.04.2017 அன்று மாலை 4.00 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உறுப்பினர் செயலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், 116ஏ, ஈவெரா பெரியார் நெடுஞ்சாலை, நேரு பூங்கா, சென்னை 600 084 என்ற முகவரிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் அவர்களின் ஒப்புதலுடன் அனுப்பப்படும், மேலும் விவரங்களுக்கு திருவள்ளூர் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்களை அலுவலக நேரங்களில் 044-27666249 அல்லது 7401703482 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~